**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 01/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 அம்பிகா –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். எனது சாட்சிய வாக்குமூலத்தின் பத்தி 7ல் பிரதிவாதிகள் எனது சொத்தை பறிக்க பலவிதத்தில் இடையூறு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 22.03.2022 அன்று மாவட்ட ஆட்சியர் நேரில் வந்து பார்வையிட்டு எனக்கு மிரட்டல் கொடுத்தாரா என்றால், சொத்தை பார்வையிட வந்தார். நான் இவ்வழக்கில் தாவா பி பட்டியல் சொத்தில் தார்சாலை அமைக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா பி பட்டியல் சொத்து சர்வே எண் 668/1சி வண்டிப்பாதை என வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 668/1சி அ பதிவேட்டில் வண்டிப்பாதை என கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா பி பட்டியல் சொத்தின் விஸ்தீரணம் 6 செண்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2) மேற்படி பி பட்டியல் சொத்தில் 10 அடி அகல வண்டிப்பாதை இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 24.03.2022 அன்று வட்டாட்சியர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியருக்கு கொடுத்த அறிக்கையில் சர்வே எண் 668/1சி வண்டிப்பாதை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வண்டிப்பாதை அரசுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலம் ஆகும். மேற்படி நிலம் அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதால், அதை பொறுத்து உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. அரசுக்கு பாத்தியப்பட்ட வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.  எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**